GSMA

## ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட சமூகம்

# மொபைல் இணைய திறன் பயிற்சிக் குறிப்பு

அடிப்படை மொபைல் இணைய திறன்கள்
தொடர்பில் மக்களுக்கான பயிற்சி வழிகாட்டி



Copyright © 2017 GSM Association

# தொகுதி – 10
# அணுகல் அம்சங்கள்
# (Accessibility Features)

# Bitesize Training

# பார்வை குறைந்த மற்றும் பார்வையற்றவர்களுக்கு அணுகல் அம்சங்கள்


## அது என்ன ?



**தெளிவுபடுத்துக :**

"பார்வை குறைந்த அல்லது பார்வையற்றவர்களுக்கு, ∴போன் திரையிலுள்ளதை பார்ப்பது கடினம். எனினும், அவர்களுக்கு உதவும் சிறப்பம்சங்கள் (features) ∴போன்களின் உள்ளன. அவர்களுக்கான மாற்று வழிகளை காண்பிக்க வேண்டும். அவர்கள் இவற்றின் சிலவற்றை ஒரே தடவையில் பாவிக்கலாம் "

## உங்களுக்கு தேவையான பொருட்கள்



மொபைல் ∴போன்




Android போஸ்டர்ஸ்

## அதனை எதற்கு பயன்படுத்துவது?

**தெளிவுபடுத்துக :** "உங்களால் ∴போன் திரையிலுள்ளதை பார்க்க முடியாவிடின், உங்களுக்கு ∴போன் 3 முறைகளில் உதவும். அம்மூன்று வழிமுறைகள் இதோ:"



- **உருப்பெருக்கம் (Magnification):**

"உருப்பெருக்கம் என்பது ∴போன் திரையிலுள்ள அனைத்தையும் சாதாரண அளவை விட பெரிதாக காண்பிக்கும் சிறப்பாகும். சிறியவற்றை பெரிதாக்கி பார்க்க அநேகர் இதனை பயன்படுத்துவர். பார்வை குறைந்தவர்களுக்கு ∴போன் திரையை பார்க்க இது உதவும் "

"சுரேஷ், நாளாந்தம் செய்திகளை வாசிக்க உருப்பெருக்கம் பயன்படுத்துகிறார். இதன்மூலம் சாதாரண அளவை விட மும்மடங்கு பெரிதாக்கலாம். மேலும் அநேக வார்த்தைகள் கொண்ட ஆக்கங்களை இலகுவாக வாசிக்கலாம்"

- **∴போன் அதிக சத்தமாக பேச வைத்தல்:** “டோக் பெக்” (TalkBack) என்பது, நீங்கள் ∴போன் திரையை பார்க்காமல், ∴போன் அதிக சத்தமாக பேசும் சிறப்பம்சமாகும். உங்கள் ∴போனில் எதையாவது செய்யும்போது, ∴போன் உங்களுக்கு என்ன நடக்கின்றது என கூறும்.”

"ரம்யா, எப்போதும் உருப்பெருக்கத்தை பயன்படுத்துவதுடன், பல மணிநேரங்கள் தொடர்ச்சியாக பார்ப்பதால் கண்களுக்கு வலி ஏற்படுவதை அவள் அண்மையில் உணர்ந்தாள். தற்போது அவள் “டோக் பெக்” வசதியை பயன்படுத்துகிறாள்.”

- **வண்ணம் மற்றும் வேதிப்பு நிற முரண் (colours and contrasts) :** "சிலருக்கு ∴போன் திரையிலுள்ள வண்ணம் (நிறம்) மற்றும் வேதிப்பு நிற முரண் காரணமாக வாசிக்க, பார்க்க அசௌகரியத்தை உணர்வர். உங்கள் ∴போன் நிறத்தை மாற்றி, மிக இலகுவாக பார்க்கும் வகையில் அதனை வைத்துக்கொள்ளுங்கள்.”

"ரம்யா, தனது ∴போனில் ஏற்படும் வண்ண மற்றும் வேதிப்பு நிறத்தை அதிகரித்துள்ளதால் WhatsApp அல்லது email களில் எழுதுவதை இலகுவாக்கியுள்ளார். இதன்மூலம் அனைத்தையும் தெளிவாக காண முடிவதால், அவரால் தவறுகள் ஏற்படுவது குறைவாகவே உள்ளது.

## அது எவ்வாறு செயற்படுகின்றது?

- **கேளுங்கள்** : பயிலுனர் தமது ∴போனை பயன்படுத்தி என்ன செய்ய விரும்புகின்றீர்கள் என கேளுங்கள்?
- **பயிற்றுனர்** : பயிலுனரின் ∴போன் இல் “அனுகல் அம்சங்கள்” செட் அப் செய்துள்ளதா என பாருங்கள்.


# காது கேட்கும் திறன் குறைந்த அல்லது காது கேளாதவர்களுக்கான அணுகல்

## அது என்ன?



**விளக்கப்படுத்துங்கள்:**
"மொபைல் ∴போன்களில் அவர்களுக்கான சிறப்பம்சங்கள் இருப்பதால், கேட்கும் திறன் குறைந்த மற்றும் காது கேளாதவர்களுக்கு சாதாரண நபர் போன்று ∴போன் பயன்படுத்தலாம்."

## உங்களுக்கு தேவையான பொருட்கள்



மொபைல் ∴போன்




Android போஸ்டர்ஸ்

## அதனை எதற்கு பயன்படுத்துவது?

**விளக்கப்படுத்துங்கள்:** "உங்களுக்கு கேட்காவிடின், மொபைல் ∴போன் உங்களுக்கு உதவும். அந்த மூன்று வழிமுறைகள் இதோ:"



- சத்தம் அதிகரித்தல் (Amplification): "உங்கள் அருகிலுள்ளவர்கள் கூறுவதை கேட்க முடியாவிடின், உங்கள் அன்ட்ரொய்ட் ∴போன் உங்களுக்கு உதவும். அதிலுள்ள சத்தம் அதிகரிக்கும் சிறப்பம்சம் ஊடாக குரலை தெளிவாக நீங்கள் கேட்கலாம்."

"ராஜா, கபேயில் பணியாற்றும்போது 'Sound Amplifier' வசதியை பயன்படுத்துகிறார். அதனூடாக பின்புல சத்தம் குறைவாக கேட்பதால், அவரால் மற்றவர்கள் கூறுவதை தெளிவாக கேட்கலாம்."

• **தலைப்பு:** " உங்கள் ∴போனில் வீடியோ பார்க்கும்போது அல்லது ஓடியோ கேட்கும்போது, உங்களால் 'captions' செயற்படுத்தலாம். அதன்போது சொல்வது வார்த்தைகளாக ∴போன் திரையில் எழுதப்படும்.பாடல் அல்லது வீடியோவிற்கு செவிமடுக்கையில் அசௌகரியத்தை உணர்பவர்களுக்கு இது பயன்படும்."

"யமுனா வீடியோ கோல் எடுக்கும்போது, captions பயன்படுத்துகிறாள். அழைப்பின்போது வார்த்தைகளை கேட்பதற்கு கடினமான தருணங்களில், captions செயற்படுத்தியிருப்பது அவளுக்கு வசதியாக உள்ளது.



• **நகலெடுத்தல் :** நேரடி நகலெடுத்தல் நாம் இதற்கு முன்னர் பேசிய captions இற்கு சமமானவை. யாராவது உங்களுடன் பேசும்போது, அவை ∴போன் திரையில் எழுதப்படுவது போன்று, உங்களால் காண முடியும். காதுகேளாத அல்லது திறன் குறைந்தவருக்கு "'Live Transcribe' மிகவும் உதவும்."

"சாஹிட், தனது கேட்கும் கருவிகளை ∴போனுடன் இணைத்துள்ளதால், அவருக்கு நன்றாக கேட்கும் திறன் ஏற்பட்டுள்ளது. தனது சகோதரி, சகோதரனுடன் WhatsApp. இல் கதைக்கும்போது அது மிக இலகுவாக உள்ளது "


## அது எவ்வாறு செயற்படுகின்றது?

**கேளுங்கள்** : பயிலுனர் தமது ∴போனை பயன்படுத்தி என்ன செய்ய விரும்புகின்றீர்கள் என கேளுங்கள்?

**பயிற்றுனர்** : பயிலுனரின் ∴போன் இல் "அணுகல் அம்சங்கள்" செட் அப் செய்துள்ளதா என பாருங்கள்.

# போஸ்டர், கட்அவுட் மற்றும் தகவல் பிரதிகள்


# நிறம் மாற்றுதல் மற்றும் சரிப்படுத்தல்




# எழுத்துக்களின் அளவை மாற்றுதல்



# டிஸ்பிளே மாற்றுதல்



# மொபைலில் நைட் லைட் ‘Night Light’ அம்சத்தை செயற்படுத்தல்



# பார்வை குறைந்தவர்களுக்கு உருப்பெருக்கம் (Magnification) செய்தல்



# தற்காலிக உருப்பெருக்கும் (Temporary Magnification)




# “டோக் பெக்” (TalkBack) அமைத்தல்



# ஒலி விரிவாக்கம் (Sound Enhancement) செய்தல்




# ஒலி அதிகரிப்பு (Sound Amplification)



# தலைப்பு (Captions) அமைத்தல்



# ‘நேரடி நகலெடுத்தல்’ (Live Transcriptions)



# மாற்றுத்திறன் கொண்ட வாடிக்கையாளர்களுடன் கருத்து பரிமாறுவதற்கான ஆலோசனைகள்

**நேரடியாக பேசுங்கள்.** அவர்களது உதவியாளர்கள் அல்லது சைகை மொழியின்றி, நேரடியாக அவர்களுடன் உரையாடுங்கள்.

நீங்கள் உதவ தயார் என்பதை கூறிய பின்னர் அவர்களுக்காக காத்திருங்கள். பின்னர் அவர்களுக்கு செவிகொடுங்கள் அல்லது மீள விசாரியுங்கள்.

**பெரியவர்களுக்கு மரியாதை செய்யுங்கள்.** மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு, சாதாரண மக்களை அவர்களது முதற் பெயர் கூறி அழைப்பது போன்று, நன்கு பரீட்சயமான பின்னரே அவர்களுடன் அவ்வாறு உரையாட வேண்டும்.

மாற்றுத்திறனாளியின் **“சக்கர நாற்காலி” அல்லது ஸ்கூட்டரில் தொங்க அல்லது சாயாதீர்கள்.** உதவிக்கு நாய் கொண்டு செல்வார்களாயின், நாயுடன் விளையாட வேண்டாம்.

கதைக்க சிரமப்படுபவர்களிடம் அமைதியாக செவி கொடுங்கள். அவர்கள் கதைத்து முடிக்கும் வரை பொறுமையாக இருங்கள். அவர்கள் குறுகிய பதில்கள் தரும் கேள்விகளை மட்டும் கேளுங்கள்.

சரியாக புரியாவிடின், புரிந்ததாக நடிக்காதீர்கள். உங்களுக்கு **புரியாததை மீள விசாரியுங்கள்.**

**சங்கடம் வேண்டாம்.** போய் வாருங்கள் அல்லது இதனை எவ்வாறு அறிந்தீர்கள் போன்ற சாதாரண வார்த்தைகளை பயன்படுத்த தேவைப்படின், நபரின் மாற்றுத்திறன் குறித்து சிந்தித்து, அது தொடர்பாக அசௌகரியப்படாதீர்கள்.

# காது கேளாத வாடிக்கையாளர்களுடன் செயற்படும்போது

**கதைக்க முன்னர் அவர்களது கவனத்தை பெறுங்கள்.** கவனத்தை பெற கையை மெதுவாக தொடுதல் போன்று வழிமுறைகள் உண்டு. அவர்களது தேவையை கேளுங்கள்.

**மெதுவாகவும் மிதமான வேகத்திலும் பேசுங்கள்.** உங்கள் குரலை உயர்த்துவதும், சத்தமிடுவதும் பயன்தாரது.

**கதைக்கும்போது அந்த நபரையே பாருங்கள்.** எப்போதும் சமமான கண் மட்டத்தை கொண்டு பேசுதல் சிறந்தது.

தகவல்களை வழங்கும்போது, **உங்களுக்கு புரிந்ததா என கேட்க மறக்காதீர்கள்.** (உதா: “உங்களுக்கு புரிந்ததா”)

புன்னகைத்தல், ஏதாவது காண்பித்தல் போன்ற **முக அல்லது உடல் பாவனைகளை வெளிப்படுத்துங்கள்.** கருத்து பரிமாற அவை முக்கியம்.

**உங்கள் முகம் வெளிச்சமாக தெரிவதை உறுதிப்படுத்துங்கள்.** உங்கள் முகம் நன்றாக தெரியாதபோது, முகபாவனைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம்.

கதைக்கும் போது பின்புற சத்தம் அதிகமாக இருந்தால் எதுவும் கேட்காது. எனவே எப்போதும் பின்புல சத்தத்தை குறைவாக வைத்திருங்கள்.

எதையாவது எழுதுவதற்காக **பென்சில் அல்லது கடதாசியை தயாராக வைத்திருங்கள்.** இரைச்சல் மிக்க பின்புலம் காணப்படின் காதுகேளாதவர்களுக்கு எழுதிக்காட்டுவது சாலச்சிறந்தது.

அவர்களுக்கு புரியாவிடின், நன்றாக விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களது **எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை கேளுங்கள்.**

செவிப்புலனற்றோர் கருவிகளை பயன்படுத்தலாம். அவர்கள் பயன்படுத்துகின்றனரா என கேட்டு, அதனை பயன்படுத்த உதவலாம். தகவல் பரிமாற்றத்திற்கு அது நன்மைத் தரும்.

**பொறுமையாக, நம்பிக்கையாக, நிதானமாக இருங்கள்.**

# கண் பார்வையற்ற வாடிக்கையாளர்களுடன் செயற்படும்போது

**உங்களை அறிமுகப்படுத்துங்கள்.** அனைவருக்கும் குரல்களை அறிந்துகொள்ளவோ அல்லது ஞாபகத்தில் வைத்திருக்கவோ முடியாது.

**சத்தமாக பேசாதீர்கள்.** கண் பார்வை குறைந்த அல்லது கண்பார்வையற்றவருக்கு கேட்பதில் பிரச்சினை இருக்காது.

**நீங்கள் அங்கிருந்து செல்வதாயின், அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.** கண்பார்வையற்ற ஒருவருடன் கதைத்துக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு கூறாமால் அங்கிருந்து செல்ல வேண்டாம்.


**கைகளால் சைகை காட்டாதீர்கள்.** ஒன்றை சரியாக காண முடியாதவரால், திசைகள் மற்றும் சைகைகளை புரிந்துகொள்வது கடினம்.

**"கண்டீர்களா" அல்லது "பாருங்கள்" போன்ற வார்த்தைகளை பயன்படுத்த தயங்காதீர்கள்.** அவை சாதாரணமாக பேசும்போது பயன்படுத்தும் வார்த்தைகள் என்பதை கண்பார்வையற்றோர் நன்கறிவர்.

**கண் பார்வையற்றவரை தள்ளவோ, இழுக்கவோ, பிடிக்கவோ வேண்டாம்.**

**உதவி செய்ய உங்கள் கைகளை நீட்டுங்கள். வழிகாட்ட எத்தகைய வழிமுறையை பின்பற்ற வேண்டும் என அவர்களிடம் கேளுங்கள்.**

அந்த நபருக்கு உதவ வழிகாட்டியாக நாய் இருப்பின், **அந்த நாயுடன் உரையாட, விளையாட போகாதீர்கள்.** நாய்க்கு சாப்பாடு கொடுக்க, அதனுடன் விளையாட வேண்டாம். அந்த நாய் உடுப்பு போன்றதை அணிந்திருக்குமாயின், அத்தகைய நாய்கள் இருப்பது உதவி செய்வதற்கே. மற்றப்படி அவற்றை கொஞ்சி விளையாட அல்ல.



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்